**பேலியகொட நகர சபை - 2022**
**-----------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

பேலியகொட நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, பேலியகொட நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி இந்த அறிக்கையில் 1.6 பந்தியில் 1.6.1 (அ) அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது முறையே ரூபா 15,009,543 தொகை மற்றும் ரூபா 984,138 தொகையாக கிடைத்திருந்த ரூபா 15,993,681 தொகைக்கான மூலதன செலவு மானியம் அத்தியாய இலக்கம் 9.9 இன் பிரகாரம் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் 2022 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு காட்டப்பட்டிருக்கவில்லை.<br>மீளாய்வாண்டின் போதும் அதற்குரிய பெறுமானத்தேய்வு கழித்தல் கணிக்கப்பட்ட அடிப்படை மீதான பெறுமதி மூலதன மானியம் என வருடத்திற்கான அகல்விரிவான வருமானத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டு முதல் நியமத்திற்கு இணங்க குறிப்பு இலக்கம் 5 மற்றும் 10 சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | அத்தியாய இலக்கம் 9.9 இன் பிரகாரம் மற்றும் உள்ளுராட்சி நிறுவன நியமனங்களுக்கான விரிவான விளக்கமளித்தலில் அடங்கியுள்ள EG 2.7 பந்திக்கு முரணாக மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 1,748,189 இற்கான | 2023 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் மூலம் இதனை சரி செய்வதற்கும் எதிர்காலத்தில் சரியான முறையில் கணக்குகள் பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| மூலதனச் செலவு மானியத்தில் ரூபா 1,311,142 தொகை ஆண்டின் போது செலவிடப்பட்ட தொகை என இனங்கண்டு மீண்டுவரும் அல்லாத செலவுகளுக்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட மாற்றல் ஆக அகல்விரிவான வருமானக் கூற்றிற்கு வருவாய் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 7,780,894 இற்கான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் மீதியில் கடந்த ஆண்டு இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 322,609 தொகையும், பெறுமதியினை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த 08 தள்ளு வண்டிகளுக்கான ரூபா 940,800 தொகையும் சரி செய்யப்பட்டு இருக்காமையால் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் மீதி ரூபா 1,263,409 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் இறுதிக் கணக்குகளின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டிடங்களின் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 645,200,000 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 18,445,000 தொகைக்கான பாதைகள் மற்றும் பாலங்களின் மீதி ரூபா 19,445,000 தொகையொன ரூபா 1,000,000 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மூலதனப்படுத்தப்பட்டிருந்த இயந்திரங்கள் இயந்திர உபகரணங்கள் ரூபா 1,765,840 தொகை இரு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனங்கள் காப்புறுதி செய்யும் காப்புறுதி கம்பனியின் பெறுமதி மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்வு கணக்கீடு | நடைமுறை ஆண்டின் மோட்டார் வாகனங்களின் சந்தை பெறுமதி மிகவும் விரைவாக உயர்வடைந்த காரணத்தினால் புதிய மீள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 3,044,295 தொகைக்கான மோட்டார் வாகன பெறுமானத்தேய்வு செலவுகள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | மிகவும் நியாயமான தற்போதை ஏட்டுப் பெறுமதி மோட்டார் வாகனக் கணக்கில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | |
| (ஊ) | 2018 முதல் 2022 திசெம்பர் வரை கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,058,400 தொகைக்கான 9 தள்ளுவண்டிகளின் பெறுமதி ரூபா 60,000 இற்கான துவிச்சக்கர வண்டியின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்த கணக்காண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (எ) | கடன்கொடுத்தோர் மிகை ஏற்பாடு ரூபா 484,626 இற்கான மற்றும் இடைநிறுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்களின் கருமங்கள் ரூபா 3,858,836 இற்கான கூட்டுத்தொகை ரூபா 4,343,462 தொகை கடன்கொடுத்தோர் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,919,093 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்கள் உரிய சொத்துக் கணக்குகளுக்கு வரவு வைத்தலுக்கு மேலதிகமாக ஆண்டிற்கான செலவுகளுக்கு வரவு வைக்கப்பட்டு ஒதுக்கங்கள் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | மீளாய்வாண்டின் களியாட்ட வரி வருமானம் ரூபா 38,000 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | அடுத்த வருடம் முதல் களியாட்ட வரி தனியான கணக்கொன்றாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஒ) | 2 நிலையான வைப்புக்கள் தொடர்பான முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 279,970 இற்கான வட்டி வருமானம் மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ஒன்றெனவும், மீளாய்வாண்டிற்குரிய 11 நிலையான வைப்புக்களுக்கு உரிய ரூபா 217,096 இற்கான வட்டி வருமானம் ஒன்று குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த கணக்காண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஓ) | மீளாய்வாண்டின் போது ரூபா 3,118,091 தொகைக்கான குப்பை வரி வருமானம் ரூபா 2,709,167 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் குப்பை வரி வருமானம் ரூபா 408,924 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், பெற வேண்டிய குப்பை அகற்றில் கட்டணம் ரூபா 915,048 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | பிழைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | மீளாய்வாண்டிற்குரிய இயந்திரப் பெறுமானத் தேய்வு ரூபா 775,238 தொகையாக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 1,033,351 தொகை என கணக்கிடப்பட்டிருந்தமையால் இயந்திர பெறுமானத் தேய்வு ரூபா 258,113 தொகையினால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அடுத்த கணக்காண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (க) | திரட்டிய நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட வேண்டிய மீளாய்வாண்டின் மிகையாகிய ரூபா 33,099,357 தொகை ரூபா 31,788,215 தொகை என ரூபா 1,311,142 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 07 கணக்கு விடயங்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 70,502,638 தொகையாக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 45,183,540 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 25,319,098 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | அடுத்த நிதியாண்டில் இந்த பிழையினை சரி செய்து மிகவும் சரியான கணக்கறிக்கை ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு பேரேட்டின் பலவின கடன்பட்டோர் கணக்கு மீதி ரூபா 19,883,414 தொகை எனினும் அட்டவணையின் படி மீதி ரூபா 18,490,543 தொகை என சமர்ப்பித்திருந்தமையால் ரூபா 1,392,871 தொகை வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் இவ்வாறான பிழைகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 104 | சபைக்கு சொந்தமான இரண்டு டிரக்டர் வண்டிகளின் ரூபா 233,600 தொகை பெறுமதியான ஹிஷ் மற்றும் ஹுக் உபகரணங்கள் காணாமல் போனமை தொடர்பாக | பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களிடம் தீர்மானப் புத்தகத்தில் தீர்மானம் ஒன்று பதிவு செய்து அறவீடு செய்வதற்காக | நிதிக் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விசாரணை மேற்கொண்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (ஆ) நிதிப் பிரமாணம் 571 | 2012 ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 10,777,309 தொகை பெறுமதியான பொது வைப்புக்களை ஆதனவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் இறுதிக் கணக்குகளுடன் வைப்புப் பதிவேட்டை நாளதுவரை ஆக்கப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 33,099,357 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 33,203,875 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரி மற்றும் வரி | 51,000 | 50,880 | 52,647 | 29,084 | 49,000 | 45,507 | 45,487 | 29,084 |
| வாடகை | 4,875 | 2,125 | 5,060 | 2,176 | 4,814 | 1,963 | 4,332 | 3,846 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,400 | 1,636 | 3,459 | 65 | 2,870 | 1,587 | 3,618 | 392 |
| ஏனைய வருமானங்கள் | 30,424 | | 74,221 | 235 | 55,619 | - | 51,141 | 289 |
| மொத்தம் | 89,699 | 54,641 | 135,387 | 31,560 | 112,303 | 49,057 | 104,578 | 33,611 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டிருந்த கருமங்களை நிறைவேற்றாமை

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு பிணம் எரிப்பதற்காக செலவிடப்படும் சராசரி எரிவாயு எண்ணிக்கை தொடர்பாக எரிவு அறிக்கை ஒன்று சபையினால் தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் இருந்து பெற்றிருக்கவில்லை. | தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் எரிவு அறிக்கை வழங்கப்படுவது அவர்களினால் தயாரிக்கப்பட்ட தகனசாலைகளுக்கு மாத்திரம் என அறிவிக்கப்பட்டமையால் நகர சபையின் தகன கூடங்களுக்கு அந்த அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு முடியாது. களஞ்சியத்தில் இருந்து தகன கூடத்திற்கு கிடைக்கப் பெறும் எரிவாயு சிலின்டர்களின் எண்ணிக்கை மற்றும் மேற்கொள்ளப்பட்ட தகனங்களின் எண்ணிக்கை தொடர்பாக பதிவேடொன்று 2023.01.01 திகதி முதல் பேணிச் செல்லப்படுகின்றது என. | முறையான பதிவேடொன்று பேணிச் செல்ல வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் உத்தியோகத்தர்களுக்காக முற்பண எல்லையினை இனங்கண்டு முற்பணக் கணக்கொன்று தயாரித்திருக்கவில்லை. | 2023 ஆண்டு முதல் முற்பணக் கணக்குகளுக்காக எல்லைகளை இனங்கண்டு கணக்கு அறிக்கைகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முற்பண எல்லைகள் இனங்காணல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் போது காணாமல் போயிருந்த மற்றும் சேதமடைந்திருந்த 4 சொத்துக்கள் தொடர்பாக மொத்தமாக ஏற்பட்டிருந்த நட்டம் கூட்டுத்தொகை ரூபா 95,150 தொகைக்காக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு மற்றும் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்ப விசாரணை அறிக்கைகளின் மூலம் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2022 திசெம்பர் 14 திகதி வரை அந்த நட்டத்தினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | விசாரணைகள் மேற்கொண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | படலை ஒன்றின் இரண்டு மூடிகள் காணாமல் போயிருத்தல் தொடர்பாக | அதன் படி இரண்டு படலைகளின் நட்டம் ஆகிய ரூபா 312,500 | விசாரணை மேற்கொண்டு நட்டத்தை |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 312,500 இற்கான அறவீடு செய்வதற்காக வழங்கியிருந்த பரிந்துரை நிதிக்குழு இணங்கியிருக்காமையால் விசாரணை ஒன்று மேற்கொள்ளும் படி 2022 பெப்ரவரி 24 திகதி உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கோரிக்கை ஒன்று விடுக்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 திகதியளவில் 10 மாதங்கள் கடந்திருந்த போதிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தொகை ஸ்ரீ ஜயந்தி சமூக சபையிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கவனயீனமாக செயற்பட்டிருந்தமையால் சபையின் JCB இயந்திரத்தின் எரிபொருள் தொட்டிக்கு ஏற்பட்டிருந்த நட்டம் உரிய நிலைமைக்கு மாற்றுவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 300,888 இற்கான தொகையில் காப்புறுதியின் மூலம் அணவல் செய்யப்படாத ரூபா 77,742 இற்கான தொகை 2022 திசெம்பர் 31 திகதி வரை பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதற்காக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் எதிர்காலத்தில் தீர்மானப் புத்தகத்தில் தீர்மானம் ஒன்று பதிவு செய்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விசாரணை நடாத்தி நட்டத்தை அறவீடு செய்வதற்கு செயற்பட வேண்டும். |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணங்கள் வைப்பதற்கான கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக உள்நாட்டு போட்டி விலைகூறல்கள் மீது தெரிவு செய்யப்பட்ட தனியார் கம்பனி ஒன்றுடன் 2022 மார்ச் 21 திகதி ரூபா 119,126,456 தொகை ஒன்றிற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதே போல் வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் என ரூபா 24,322,994 தொகை 2022 ஏப்ரல் 05 திகதி குறிப்பிட்ட கம்பனிக்கு செலுத்தியிருந்த போதிலும் 2023 ஏப்ரல் 26 திகதிய 2022/03 இலக்கங் கொண்ட பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி செயற்திட்டத்தின் வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தது. | பதில் கிடைத்திருக்கவில்லை. | செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பெறுகை அறிவித்தல் இரண்டு தடவைகள் மும்மொழிகளிலும் பத்திரிகைகளில் வெளியிடுவதற்கு நேரிட்டிருந்தமையால் ரூபா 195,021 இற்கான விளைவற்ற செலவொன்று சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | ஆரம்ப சந்தர்ப்பத்தில் பெறுகை அறிவித்தல் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டு இருந்ததுடன் அந்த அறிவித்தலுக்கு திருத்தம் ஒன்று மேற்கொள்வதற்கு சபைக்கு தேவைப்பட்டிருந்தமையால் திருத்திய அறிவித்தல் ஒன்று வெளியிடுவதற்கு நேரிட்டிருந்தது. | அனைத்து சந்தர்ப்பங்களிலும் பெறுகை அறிவித்தல் சரியாக பிரசுரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | உத்தேச காணியின் மண் பரிசோதனை அறிக்கை ஒன்று பெற்றுக் கொள்வதற்காக ரூபா 65,286 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | ஆரம்ப சந்தர்ப்பத்தில் பில் பத்திரம் ரூபா 396,900 தொகையாக இருந்ததுடன் இரண்டாவது சந்தர்ப்பத்தில் பில் பத்திரம் ரூபா 462,186 தொகையாக இருந்தது. அதன்படி மிகைக் கொடுப்பனவொன்று மேற்கொள்வதற்கு நேரிட்டது என. | மிகையாக செலுத்திய தொகையை திருப்ப அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |